மனம் ஒவ்வாத ஆனால் பை நிறையும் தொழில் நுட்பப் பணியை உதறிவிட்டு தங்கள் மனம் விரும்பிய பாதையில் செல்லும் புதுமைப்பெண்கள் வரிசையில் பெங்களூர் அனிதா ராமனும் இணை கிறார். அப்படி என்ன புதுமையைச் செய்கிறார் அனிதா?

கணினியில் சுழலும் வாழ்வைக் கிராமத்து மாணவர்கள் முதல் நகரத்து மாணவர்கள் வரை எளிதாகத் தரம் கண்டு தங்களுக்கான துறையைத் தேர்ந்தெடுக்க, தான் வடிவமைத்த 'கோட் பண்ணு' (www.codepannu.com) எனும் வெப்சைட் மூலம் ஆன்லைனில் கற்றுத்தருகிறார் இவர்.

பார்க்க நவீனப் பெண்ணாக கலகலவென்று பேசும் அனிதா, கிராமத்துக் குழந்தைகள் பற்றிக் கவலை கொள்வதும் அவர்களுக்குக் கம்ப்யூட்டர் லைனில் பக்கத்துணையாக இருக்க வேண்டும் என்று மற்ற நிறுவனங்கள் பெறும் கட்டணத்தில் சிறு பகுதியை மட்டும் பெற்றுப் பயிற்சிகளை அளிப்பதும் ஆச்சர் யம் தருகிறது. இனி அனிதா...

''நான் தூத்துக்குடியைச் சேர்ந்த பக்கா தமிழ்ப் பொண்ணு. அப்பா ராமனும் அம்மா லீலாவும் காதல் தம்பதியினர். என்னுடன் பிறந்தவர்கள் அண்ணன், அக்கா என இரண்டு பேர். கடைக்குட்டி நான். அரசுப் போக்குவரத்து நடத்துனராகச் சொற்ப சம்பளத்தில் குடும்பம் ஓடினாலும் எங் களுக்கான கல்வி அறிவை ஊட்டி, இந்தச் சமூகத் துக்கு நம்மாலான பங்கினைத் தர வேண்டும் என்பதையும் சொல்லி வளர்த்தார் அப்பா. இதனால் பள்ளியிலேயே நான் எதையும் வேகமாகவும் ஆர்வ மாகவும் கற்றுக்கொண்டு அதைத் தெரியாத மற்ற வர்க்குக் கற்றுத்தருவதில் ஆர்வமாக இருப்பேன்.

கம்ப்யூட்டர் சயன்ஸில் இளநிலை பொறியியல் பட்டப் படிப்பு முடித்ததும் பெங்களூர் நிறுவனத் தில் பணி கிடைத்தது. ஆறு ஆண்டுகள் அங்கு பணி யில் இருந்தேன். அங்கு என்னுடன் பணியில் இருந்த நல்ல நட்புகொண்ட தீபக் தேவராஜை, பெற்றோருக் குப் பிடித்துப்போக, அவருடனே திருமணம். பெங் களூர் என் புகுந்த ஊரானது. திருமணத்திற்குப் பின் நான்கு ஆண்டுகள் கழிந்தாலும் மனதுக்குள் எனக் கான இலக்கு வேறு என்பதை மட்டும் அவ்வப் போது சொல்லிக்கொள்வேன். என் இலக்கை

கோட்பண்ணு;

அடைய வழிவகுத்தது கொரோனா வும் ஊரடங்கும். ஊரடங்கின்போது கற்றல் முதல் கலை வரை அனைத் தும் ஆன்லைன் வழியே என்பதைக் கவனித்தேன். நானும் உருவாக் கினேன், 'கோட்பண்ணு' எனும் என் இலக்கின் இணையதளத்தை.

பல லட்சங்களைக் கொட்டி இன்ஜினீயர் படிப்பை முடித்து தகுந்த வேலை கிடைக்காமல் திண்டாடும் முதல் நிலைப் பட்டதாரி இளைஞர்களின் நிலை இங்கு பரிதாபம். இவர்களை வேலைக்குத்

தேர்ந்தெடு!

தேர்ந்தெடுத்து முதல் இரண்டு வருடங்கள் எதையும் அவர்களுக்குக் கற்றுத்தராமல் இருக்கும் கம்பெனி கள் உண்டு. அதன்பின் அவர்கள் அடுத்த நிலைக்குச் செல்வதற்குள் தங்கள் பணியின்மீது அலுப்புதட்டி விடும்.

இந்தத் தேக்கம் என்னுள் பெரிய தாக்கத்தை உண்டு செய்தது. அனுபவசாலிகளுக்குக் கற்றுத் தருவதை விட, இவர்களுக்குக் கற்றுத்தந்து எளிதாக அடுத்த நிலைக்கு இவர்களைக் கொண்டு செல்ல முடியும். அதற்குத் தேவை இவர்களின் துறையைப் புரிந்துகொண்ட சரியான வழிகாட்டி. நான் அந்த வழிகாட்டியாகச் செயல்பட்டேன்.

தற்போது ஆன்லைன் பிசினஸாகச் சில நிறுவனங்கள் இதைப் படித்தால் உடனே உங்கள் பிள்ளை புத்திசாலியாகி வேலை எளிதாகக் கிடைக்கும் என்று பெற்றோரை நம்பவைத்துப் பணம் பறிக்கிறார்கள். ஆனால், உண்மையில் நான்கு வருடம் பயின்ற மாணவனால் உருப்படியாக ஒரு புரோகிராமைக் கூட கணினியில் உருவாக்கத் தெரியவில்லை என்பதுதான் வேதனை. கணினியின் அடிப்படையான கம்ப்யூட்டர் கோடிங் அதாவது கணினிக் குறியீடு பற்றிய அடிப்படை அறிவு இருந்தால் மட்டுமே எதிர்காலத்தில் மாணவர்கள் எந்தத் துறைக்குச் சென்றாலும் நிலைக்க முடியும். எந்த ஒரு மென்பொருளையும் இயக்க கோடிங் தெரிந்திருக்க வேண்டும்.

ஆகவேதான் என் பயிற்சி வகுப்புகளில் நான் கோடிங் பற்றிய அறிவை மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறேன். நாளை அவர்கள் எந்தத் துறைக்குச்

சென்றாலும் இந்தக் கோடிங் பயிற்சி அவர்களுக்கு உதவும். நகரத்துக் குழந்தைகள் மட்டுமின்றி, கிராமத்துக் குழந்தைக்கும் இப்பயிற்சி சென்று அடைய வேண்டும் என்பதே என் இலக்கு.

எளிதாகப்புரியும்படி சொல்லவேண்டுமென்றால் ஜாவா சி++ பிஎச்பி போன்று இப்போது பைதான் (PYTHON) எனும் குறியீட்டு மொழியைக் கற்றுத் தருகிறோம். பள்ளிக் குழந்தைகளிடம் இருந்து துவங்கி பயிற்சி அளித்து வருகிறோம்."

அனிதாவின் பயிற்சி வகுப்புகளை இளம் சிறார்கள் ஆர்வத்துடன் கவனிக்கிறார்கள் என்பதற்கு ஆறாம் வகுப்பு படிக்கும் அலகாபாத் மேதினி, தூத்துக்குடியைச் சேர்ந்த ஐந்து வயது யு.கே.ஜி. பயிலும் ஆஸ்டின், ஐந்தாம் வகுப்பு படிக்கும் பத்து வயது அஸ்ரிதா போன்றோர் சான்று.

கிராமத்துக் குழந்தைகளுக்கு, கம்ப்யூட்டர் அறிவை வளரச்செய்யத் தன்னால் முடிந்த முயற்சி யைக் கையில் எடுத்து, அதை வெற்றிகரமாக நிகழ்த்தி வரும் கணினிப் பெண் அனிதா ராமனுக்கு பாராட்டுகள். ◆